2011 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் கூட்டுறவு நூற்பாலையைத் திறப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். அதற்குத் தேவையான நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப்படுமென்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அங்கே பட்டு வர்த்தக மையம் அமைவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

55—

கூட்டுறவு உணவகங்கள்

***1734—திரு. இரா. காமராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெடுஞ்சாலைகளில் போக்குவரத்துக் கழகங்களின்மூலம் கூட்டுறவு உணவங்கள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தற்போது நிதிப் பற்றாக்குறையின் காரணமாக நெடுஞ்சாலைகளில் கூட்டுறவு உணவகங்கள் அமைக்கும் திட்டம் ஏதும் போக்குவரத்துக் கழகங்களிடம் இல்லை. வருங்காலங்களில் நெடுஞ்சாலைகளில் உணவகங்கள் அமைப்பது குறித்து நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வாழவைக்கும் தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 14—வது சட்டமன்றப் பேரவையில் என்னுடைய முதல் உடுக்குறியிட்ட வினாவினைத் தொடங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதிநிலைக்கேற்றவாறு பின்னர் பரிசீலிக்கப்படுமென்று பதில் அளித்திருக்கிறார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் நிதிநிலை நிச்சயமாகச் சரியாகிவிடும். பின்னர் அதனை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்கிற வேண்டுகோளை வைப்பதோடு, கடந்தகால ஆட்சியாளர்கள் நெடுஞ்சாலைகளில் பயணம் செய்கிற பயணிகளைக்கூட விட்டுவைக்கவில்லை. தங்களுடைய பினாமிகள் பெயர்களில் சன், சூர்யா முதலிய அடைமொழிகளோடு சாலையோர உணவுக் கடைகளையும் நடத்திக்கொண்டு, அந்தக் கடைகளில்தான் பேருந்துகளை நிறுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தி, அங்கே தரமற்ற, சுகாதாரமற்ற உணவுப் பொருட்களை பயணிகள் அதிக விலை கொடுத்து வாங்குகிற நிலைக்கு ஆளாக்கியிருந்தார்கள். எனவே, உடனடியாக கூட்டுறவு உணவகங்களை அமைக்க முடியவில்லையென்று சொன்னாலும், இவற்றையெல்லாம் ஆய்வு செய்து அமைச்சர் அவர்கள், நெடுஞ்சாலைகளிலே பயணம் செய்கிறவர்கள் சுவையான நல்ல உணவைச் சாப்பிடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுவையான உணவு கேட்கிறார்; கொடுத்து விடுங்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துகள் அனைத்தும் உண்மை. கடந்த ஐந்தாண்டுக் கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பேருந்துகள் செல்கின்ற வழியில், நெடுஞ்சாலை உணவகங்களை கடந்தகால ஆட்சியாளர்கள் அமைத்து, ஒரு கட்டுப்பாடில்லாத விலையை நிர்ணயித்து விற்கக்கூடிய ஓர் அவல நிலை இருந்தது. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, போக்குவரத்துத் துறைக்கு இட்ட கட்டளையின்படி, தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள தனியார்*

உணவகங்களில் எங்கெல்லாம் அதிகமான விலைக்கு விற்கப்படுகிறதோ——குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் ஒரு லிட்டர் தண்ணீர் பாட்டில் 8 ரூபாய் 50 பைசாவுக்கு கடைகளுக்கு விநியோகிக்கப்பட்டபோது, அவை 22 ரூபாய், 25 ரூபாய் அளவிற்கு பொது மக்களிடத்தில் விற்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, மாண்புமிகு அம்மாவினுடைய உத்தரவினை ஏற்று, தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள உணவகங்களில் அதுபோன்று அதிகப்படியான விலைக்கு விற்கப்படுவதைத் தடுக்க போக்குவரத்துத் துறையால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவை தண்ணீர் பாட்டில்களாக இருந்தாலும் சரி, அல்லது Cool Drinks–*ஆக இருந்தாலும் சரி,* M.R.P. *என்ன இருக்கிறதோ அந்த விலைக்கு விற்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. தொடர்ந்து எங்கேயாவது அதிகப்படியான விலைக்கு தரமற்ற உணவுகளை விற்றால், அதுகுறித்து அவையினுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்தால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய தங்க நாற்கரச் சாலைத் திட்டத்தின்கீழ், மராட்டிய மாநிலம் புனேவை அடுத்து, 5 தேசிய நெடுஞ்சாலைகள் சங்கமிக்கின்ற தேசிய நெடுஞ்சாலைகளுடைய சங்கமமாக கிருஷ்ணகிரி விளங்குகிறது. அந்த நெடுஞ்சாலையிலே உள்ள தனியார் விடுதிகள் தரமற்ற உணவை வழங்குவதால், அதை உட்கொள்கின்ற பயணிகளுக்கு உடல் கெடுதல் ஏற்படுகிறது. ஆகவே, நம்முடைய போக்குவரத்துத் துறையின் சார்பாக கூட்டுறவு உணவகங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுக் கால தி.மு.க. அரசில், கருணாநிதி அரசில், போக்குவரத்துத் துறை என்ற ஒரு துறை*

செயல்பட்டதா என்று கேள்வி கேட்கின்ற அளவிற்குப் போக்குவரத்துத் துறையைச் சீரழித்துவிட்டார்கள். இப்பொழுது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், ஒவ்வொரு மாதமும் போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கு நிதியை வழங்கி, போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் விளக்கேற்றுகின்ற முதல்வராக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவு உணவகங்களை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையில் இப்பொழுது போக்குவரத்துக் கழகத்தினுடைய நிதிநிலை இல்லை. விரைவில் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியில் நிதி நிலை சீராகும். போக்குவரத்துத் துறை மேம்படும். அப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆய்வுகளை மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

56—

நியாய விலைக் கடை

***646—திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், கம்மசமுத்திரம் கிராமம், பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. புத்திசந்திரன், உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், கம்மவான்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் மேட்டுப்பாளையம் தாய்க் கடை செயல்பட்டு வருகிறது. மேற்படி